கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் ரெட்டாக்குறிச்சி ஊராட்சியில் (RO WATER) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார்.உடன் மங்களூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அடரி.த. சின்னசாமி தெற்கு ஒன்றிய செயலாளர் பா. செங்குட்டுவன் , கே.என்.டி.சங்கர், மாங்குளம் வெங்கடேசன், க. இராமதாஸ், புகழேந்தி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

கடலூர், பிப். 13-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் - தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி டெல்டா மண்டல பொறுப்பாளர் நகர்புற நிர்வாக துறை அமைச்சர் அமைச்சர் கே.என். நேரு அவர்களின் தலைமையில் 14-02-2026 நாளை காலை 8.45 மணியளவில் கமுதூர்-ஸ்ரீ வெங்கடேஷ்வரா கல்லூரி வளாகத்தில் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயல் வீரர்கள்

கூட்டம் நடைபெறுகிறது.

கூட்டத்தில் நான் (சி.வி. கணேசன்) வரவேற்புரை ஆற்றுகிறேன்.

மாவட்ட அவைத் தலைவர் டாக்டர். கோ. நந்தகோபாலகிருஷ்ணன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் மாவட்ட பொருளாளர் கோ. தண்டபாணி மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பாவாடை கோவிந்தசாமி வெங்கட்ராமன் ராஜவன்னியன் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள்- மாவட்ட கழக நிர்வாகிகள்- தலைமை செயற்குழு-பொதுகுழு உறுப்பினர்கள்- முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் - ஒன்றிய கழக- நகர கழக- பேரூர் கழக செயலாளர்கள்- நிர்வாகிகள்- மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்- துணை அமைப்பாளர்கள்- முன்னாள் இந்நாள் உள்ளாட்சிமன்றபிரதிநிதிகள்-ஒன்றிய-நகர- பேரூர் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்- போக்குவரத்து சங்க நிர்வாகிகள்- நெய்வேலி தொமுச நிர்வாகிகள் - கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர்- அமைச்சர் சி.வி. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நகரக் கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டத்தில்

இந்திய ரிசர்வ் வங்கியின் பங்களிப்பு அதிகரித்துள்ளதா?

மாநிலங்களவையில் – எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப்.13

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ்.ஆர்.சிவலிங்கம் 10 பிப்ரவரி 2026 அன்று மாநிலங்களவையில், நகரக் கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டத்தில், இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதிகள் அதிகரித்துள்ளதா? என்றும், வங்கிகளின் மேலாண்மை, ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் அனைத்து தரப்பினருக்குமான வளர்ச்சி ஆகியவற்றை பாதுகாக்கும் இந்திய ரிசர்வ் வங்கி கவனம் செலுத்துமா? என்றும், புதிய அனுமதிகள் வழங்க ஒன்றிய அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளதா? என்றும், அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரியிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

கடந்த ஜனவரி 2026 முதல் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி வழங்கும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது என்றும், குறைந்த பட்சம் முதலீடாக ரூபாய் 300 கோடிகள்

அளவிற்கு உள்ள நகர கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும் பல்வேறுப்பட்ட பயனாளிகளை கொண்டு அந்த வங்கிகள் இயங்கும் என்றும், நகர்ப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் அனைவரையும் உள்ளடக்கியதாக கூட்டுறவு வங்கிகள் செயல்பட வேண்டும் எனவும் இணையமைச்சர் தெரிவித்தார்.

நகரக் கூட்டுறவு வங்கியின் பங்குப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் குறைந்த பட்ச இருப்புக் காலம் பத்து ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், முதலீட்டாளர்கள் நலனைப் பாதுகாக்க, ஒழுங்காற்று விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், புவியியல் ரீதியாக நகரப் பகுதிகளில் வசிப்பவர்கள் மட்டுமே பங்குதாரர்களாக சேர்க்கப்படுவர் என்றும், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, நான்காம் நிலை நகர கூட்டுறவு வங்கிகளுக்கு முதலீட்டு விகிதம் 12 சதவீதமாக உயர்த்துப்பட்டுள்ளது என்றும், முதல் நிலையிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு கையிருப்பு முதலீட்டு விகிதம் 55 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் மூலம், வங்கித் துறையின் வளர்ச்சி கூட்டுறவுத்துறையில் அதிகரிக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக

இந்தியா - ஈரான் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதா?

மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப். 13 -

அமெரிக்கா வரிவிதிப்பு காரணமாக இந்தியா ஈரான் வர்த்தகம் பாதிக்குமா? என்றும் சபாஹர் துறை முகத்தில் இந்தியாவின் பங்கு குறித்தும் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

இந்தியாவும் ஈரானும் குறிப்பிடத்தக்க வர்த்தக உறவைப் பகிர்ந்து கொள்கின்றனவா? 2025-26 நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகம் $2 பில்லியனை எட்டியுள்ளதா, முக்கிய ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் மற்றும் சாபஹர் துறைமுகம் மற்றும் INSTC போன்ற மூலோபாயத் திட்டங்களால் இயக்கப்படுகிறதா?

இந்தியா சபாஹர் துறைமுகத்தில் $500 மில்லியன் முதலீடு செய்திருக்கிறதா? சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடத்தை சார்ந்து ஈரான் வழியாக ரஷ்யா மற்றும் ஐரோப்பாவுடன் இந்தியாவை இணைக்கிறதா? பாரம்பரிய கடல்வழிப் பாதைகளுடன் ஒப்பிடும்போது போக்குவரத்து நேரங்கள் மற்றும் செலவுகளைக் குறைக்கிறது மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% வரி விதிப்பது ஈரானுடனான இந்தியாவின் வர்த்தகச் சமன்பாட்டை மோசமாகப் பாதிக்குமா?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

பதில் : அதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

நடப்பு நிதியாண்டில் (ஏப்ரல்டிசம்பர், 2025), ஈரானுடனான இந்தியாவின் மொத்த வர்த்தக வர்த்தகம் USD 1,145.29 மில்லியனாக இருந்தது, இதில் USD 883.10 மில்லியன் ஏற்றுமதியும் 262.19 மில்லியன் டாலர் இறக்குமதியும் அடங்கும். இந்தியாவின் வர்த்தகம் பெரும்பாலும் மனிதாபிமான இயல்புடையது, விவசாய பொருட்கள் மற்றும் மருந்துகளை உள்ளடக்கியது. ஏப்ரல்நவம்பர் 2025 காலப்பகுதியில், உருப்படி வாரியாக மற்றும் மதிப்பு வாரியாக, ஈரானுடனான இந்தியாவின் சரக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விவரங்களை பின்வரும்

இணையத்தில் அணுகலாம்:

https://tradestat.commerce.gov.in/meidb/country_wise_all_commodities_export

https://tradestat.commerce.gov.in/meidb/country_wise_all_commodities_import

ஆப்கானிஸ்தானின் புனரமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், மத்திய ஆசியாவுடனான வர்த்தகம் மற்றும் பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துவதற்காகவும் ஆப்கானிஸ்தானுக்கு மிகவும் தேவையான இணைப்பை வழங்குவதற்காக சபாஹர் துறைமுக திட்டம் கருத்தாக்கப் பட்டது. இந்தியா போர்ட்ஸ் குளோபல் லிமிடெட் (ஐபிஜிஎல்) என்ற இந்திய நிறுவனமானது, அதன் முழுச் சொந்தமான துணை நிறுவனமான இந்தியா போர்ட்ஸ் குளோபல் சபஹர் ஃப்ரீ சோன் (ஐபிஜிசிஎஃப்இசட்) மூலம் 2018 ஆம் ஆண்டு முதல் துறைமுகத்தை இயக்கி வருகிறது. 13 மே 2024 அன்று, ஐபிஜிஎல் போர்ட்ஸ் அண்ட் மரைடைம் ஆர்கனைசேஷன் ஆஃப் தி இஸ்லாமிக் டெர்மினிட் ஆஃப் தி இஸ்லாமிக் டெர்மினிட் ஆஃப் தி இரான் போர்ட்ஸ் அன்ட் மரைடைம் ஆர்கனைசேஷன் ஆஃப் தி இஸ்லாமிக் ரிபப்ளிக் ஆஃப் தி போர்ட்ஸ் அன்ட் மேரிடைம் ஆர்கனைசேஷன் உடன் கையொப்பமிட்டது. சபஹர் துறைமுகம். ஒப்பந்தத்தின் விதிகளின்படி, துறைமுக உபகரணங்களை வாங்குவதற்காக 120 மில்லியன் அமெரிக்க டாலர்களை இந்தியா நிறைவேற்றியுள்ளது.

ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% வரி விதிப்பது ஈரானுடனான இந்தியாவின் வர்த்தக சமன்பாடு பாதிப்பு குறித்து எந்த தகவலும் இல்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர்

டாக்டர் எஸ்.ஜே.கயஸ் மறைவு!

கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 13 –

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.ஜே.கயஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்து அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.ஜே. கயஸ் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2026 புதன் கிழமை) மாலை இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் நாட்டுப் படகு மீனவர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நொளம்பூர் வே.ராஜன் தலைமை! ஹேமலதா கணபதி முன்னிலை!

மதுரவாயல் 150வது வட்டத்தில் ரூ.32.57 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவர் பூங்கா!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, பிப்.13-

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு 150, காரம்பாக்கம், ராஜேஸ்வரி நகர் 2வது தெருவில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் ரூ.32.57 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் திறப்பு நிகழ்ச்சி இன்று (13.02.2026) மாலை 4.00 மணியளவில் 150வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஹேமலதா கணபதி முன்னிலையில், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் தலைமையில், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி கலந்து கொண்டு சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள். ஆகவே, இத்திறப்பு நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆலந்தூர் தெற்கு பகுதி முன்னாள் துணைச் செயலாளர் கே. சௌந்தரி (61) நேற்று முன்தினம் (11.02.2026) காலை இயற்கை எய்தினார். அன்னாரது உடலுக்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் என். சந்திரன், 167வது வட்டச் செயலாளர் ஜெ. நடராஜன், சாலமோன் எம்.சி., வெங்கட்ரமணன், பிரான்சிஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.

ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதப் போக்கு!

தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை, பிப்.12–

நாடு முழுவதும் ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள தொழிலாளர் விரோத 4 சட்ட தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும் என்பன உட்பட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம், சாலை மறியல், ஆர்ப்பாட்டம் உள்ளிட்டவை நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொழிற்சங்கங்களின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை, அண்ணாசாலை தாராப்பூர் டவர் அருகில், ஒன்றிய அரசை கண்டித்து INTUC, AITUC, HMS, CITU உள்ளிட்ட 10 தொழிற் சங்கங்கள் இணைந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில், வி.பி.ஜி ராம் ஜி சட்டத்தை ரத்து செய்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மீண்டும் பழையபடி அமல்படுத்த வேண்டும் என முழக்கமிட்டனர்.

மேலும், அமெரிக்காவுடனான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை கைவிட வேண்டும், விவசாய விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய வேண்டும், விக்சித் பாரத் கிராமின் மிஷன் 2025 சட்டத்தை ரத்து செய்து, இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் முழக்கங்கள் இட்டனர்.

தியாகராயர் நகர் முன்னாள் பகுதிக் கழகச் செயலாளர்

பழக்கடை கி.ஜெயராமன் 42 ஆம் ஆண்டு நினைவு நாள்!

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ – கே.ஏழுமலை எம்.சி அறிக்கை!

சென்னை, பிப். 13 -

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராய நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் முன்னாள் பகுதிக் கழகச் செயலாளர் பழக்கடை கி.ஜெயராமன் அவர்களின் 42 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (14.02.2026 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில், தியாகராயர் நகர், கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதற்கு தியாகராயர் நகர் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக்கழகநிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என். ஜெயக்குமார்

பிப்ரவரி 13 (2024)

கழகம் துவக்கப்பட்ட போது, தலைமைக் கழக அலுவலகமாக செயல்பட்டு வந்த இராயபுரம், "அறிவகத்தில்" 1970ஆம் ஆண்டு முதல் பணியாற்ற தொடங்கி, சற்றேறக்குறைய 54 ஆண்டு காலமாக, தலைமைக் கழகத்தில் பணியாற்றியவர்.

கழகத் தலைவர்களான முத்தமிழறிஞர் கலைஞர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஆகிய இருபெரும் தலைவர்களின் அன்பை பெற்றதுடன், அவர்கள் எண்ண ஓட்டமறிந்து, அதனை உடனே செயல்படுத்தி வந்தவர்.

கிளை முதல் மாவட்ட அமைப்பு வரையிலான அனைத்து அமைப்புகளின் பெயர், அதன் நிர்வாகிகள் பெயர் என அனைத்து விவரங்களையும் கணினி போல தன் மனதில் பதிந்து வைத்து, அதனை தலைவர் கேட்கும்போது உடனடியாக சொல்லக் கூடிய ஆற்றல் பெற்றதுடன், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து கழக நிர்வாகிகள், முன்னோடிகளின் வரலாற்றை அறிந்து வைத்திருந்தவர்.

கழகத் தலைவர் அவர்கள் "தலைமைக் கழகத்தை நாடி வந்த ஒவ்வொரு உடன்பிறப்பும் அன்போடும் உரிமையோடும் உறவாடி 'அறிவாலயம் ஜெயக்குமார்' எனப் பெயரிட்டனர். உடன்பிறப்பு என்ற சொல்லுக்கேற்ப உடன்பிறப்பாய் துணை நின்ற அறிவாலயம் ஜெயக்குமார் அவர்களை வழியனுப்பும் துயர நிலைக்கு இன்று ஆளாகிவிட்ட கொடுமையும் வந்து சேர்ந்துவிட்டது. கலங்கி நிற்கும் உங்கள் அனைவருக்கும் ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறேன்." என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்

பிப்ரவரி 13 (2009)

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.